நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## நிலத்தடி நீர், பாசனத்தைப் பாதிக்கும் கிரானைட் குவாரியை தடை செய்ய வேண்டும்

First Published : 27 May 2010 12:19:40 PM IST

அம்பாசமுத்திரம், மே. 26: நிலத்தடி நீர், பாசனத்தைப் பாதிக்கும் வகையில் தாமிரபரணி நதிக்கரையில் செயல்பட்டு வரும் கிரானைட் குவாரியை தடை செய்ய வேண்டும் என இந்திய கம்யூ. கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு கூறினார்.

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அருகே ஆலடியூரில் தாமிரபரணி நதிக் கரையில் கிரானைட் குவாரி6 செயல்பட்டு வருகிறது. இந்த குவாரியில் அனுமதிக்கப்பட்டதைவிட அதிக ஆழத்தில் வெடி வைத்து கிரானைட் எடுப்பதால் ஆலடியூரில் வீடுகளில் விரிசல் ஏற்படுகிறது. பாசனமும் பாதிக்கும் அபாயம் இருப்பதாகக் கருதப்படுகிறது. இதற்கிடையே புதன்கிழமை இந்திய கம்யூ. கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக்குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு ஆலடியூர் வந்தார். கிரானைட் குவாரியினால் விரிசல் ஏற்பட்டுள்ள வீடுகளை அவர் பார்வையிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது: கனிம வளங்கள் அதிகமாக இருப்பதைக் கண்டறிந்து தாமிரபரணி நதிக் கரையில் ஆலடியூரில் கிரானைட் குவாரி நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி நதி, நதியுன்னி கால்வாய் கரையில் கிரானைட் குவாரி அமைந்துள்ளது.

இங்கு இரவு நேரங்களில் அதிகளவில் சக்தி வாய்ந்த வெடி வைத்து கிரானைட் எடு6க்கப்படுகிறது. அருகில் 8 ஏக்கரில் அமைந்துள்ள குளம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. குவாரியினால் குளத்தின் நிலத்தடி நீர் ஆதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இக்குளத்தின் மூலம் பாசனம் பெறும் 12 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தாமிரபரணி நதிக்கரையோரமாக மணிமுத்தாறு பேரூராட்சிக்குள்பட்ட ஆலடியூரில் 200 க்கும் மேற்பட்ட வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது. 4 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட புதிய வீடுகளில்கூட விரிசல் காணப்படுகிறது.

ஆலடியூரில் தாமிரபரணி நதியின் குறுக்கே 1968 -ல் முதல்வர் கருணாநிதியால் அடிக்கல் நாட்டப்பட்டு 1971 திறக்கப்பட்ட பாலத்தின் ஒரு பகுதி உடைந்து சேதம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து குவாரி செயல்பட்டால் தாமிரபரணி நதிக்கரையில் நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து பாசனம் பாதிக்கும் அபாயம் உள்ளது. சக்திவாய்ந்த வெடி வைத்து வெடிப்பதால் 2 கி.மீ. அருகில் உள்ள மணிமுத்தாறு அணை பாதிக்கக் கூடும் என்ற அச்சம் உள்ளது.எனவே பொதிகை மலை அடிவாரத்தில் தாமிரபரணி நதிக்கரையில் செயல்படும் கிரானைட் குவாரியை அரசு தடை செய்ய வேண்டும். இதேநிலை நீடித்தால் திருநெல்வேலி மாவட்ட மக்களை திரட்டி இந்திய கம்யூ. கட்சி போராட்டம் நடத்தும் என்றார் அவர்.

ஆலடியூரில் முப்புடாதிஅம்மன் கோயில் தெரு, கீழக்காலனி பகுதியில் குவாரியினால் விரிசல் ஏற்பட்டு சேதமடைந்த வீடுகள், சேதமடைந்துள்ள பாலம் ஆகியவற்றை நல்லகண்ணு பார்வையிட்டார். அவரிடம் அங்குள்ள பொதுமக்கள் குவாரியினால் ஏற்படும் பாதிப்பு குறித்து புகார் தெரிவித்தனர்.

அவருடன் கட்சியின் மாவட்டச் செயலர் ஆர். சண்முகவேல், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் அ. சேவியர், அம்பாசமுத்திரம் ஒன்றியச் செயலர் ஏ. அனைவீரக்கண்ணு, வடிவேலு உள்ளிட்டோர் சென்றனர்.

**பருத்தியில் மாவுப் பூச்சிகள் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

First Published : 27 May 2010 10:29:37 AM IST

பெரியகுளம், மே 26: பருத்திச் செடியில் மாவுப் பூச்சிகள் தாக்குதலைக் கட்டுப்படுத்து வதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெரியகுளம் வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளதாவது:

பெரியகுளம் அருகே ஜெயமங்கலம் பகுதியில் வீரிய ஒட்டு பருத்தி (பணணி) சுமார் 80 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப் பயிர் தற்போது சப்பை பிடிக்கும் பருவத்தில் உள்ளது. இத் தருணத்தில் செடிகளில் வெள்ளை நிற மாவுப் பூச்சிகள் ஆங்காங்கே தென்படுகின்றன. இப் பூச்சிகள் தாக்குதலால் பருத்தி மகசூலும், தரமும் குறைந்து விடும்.

மாவுப் பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்: பருத்திச் செடியின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். இலைகள் வளைந்து, நெளிந்து, சிறுத்து, திருகிக் கொண்டிருக்கும். இலைகளின் அடிப் பகுதி, குருத்து, கிளைகள் மற்றும் தண்டுப் பகுதிகளில் வெள்ளையாக அடைபோல மாவுப் பூச்சி படர்ந்திருக்கும். பருத்தி வயல்களில் எறும்புகளின் நடமாட்டம் இருக்கும். அதிகமான தாக்குதலினால் செடிகள், இலைகள் இன்றி வாடி கருகிவிடும்.

அதிக அளவு பரவுவதற்கான காரணங்கள்: எல்லா வகை பயிர்களும் வாழும் தன்மையுடையவை. தாக்கப்பட்ட செடிகள், களைகள், எறும்பு, காற்று, தண்ணீர், மனித நடமாட்டம் மூலம் வேகமாக பரவும் குணம் உடையவை. தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு அதிக நாள்கள் உயிர் வாழ்ந்து, குறுகிய காலத்தில் அதிக இனப்பெருக்கம் செய்யும் தன்மையுடையவை.

வேளாண் துறையால் பரிந்துரை செய்யப்படாத பூச்சிகொல்லி மருந்துகளையும், செயற்கை பைரித்ராய்டு மருந்துகளையும் உபயோகித்தால் இப் பூச்சிகள் அதிகமாக பரவிவிடும்.

மாவுப்பூச்சி மேலாண்மை முறைகள்: வயல்களில் களைகளை அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும். பூச்சிகள் அதிகம் தாக்கிய பருத்திச் செடிகள் மற்றும் களைச் செடிகளை பிடுங்கி அழிக்க வேண்டும். இப் பூச்சிகளின் தாக்குதல் குறைவாக இருக்கும்போது, பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் சேதம் குறைவாக இருக்கும்போது வேப்பெண்ணெய் 2 சதவீதம் அல்லது வேப்பங் கொட்டை பருப்பு சாறு 5 சதவீதம் அல்லது மீன் எண்ணெய் சோப்பு 25 கிராம் ஆகியவற்றை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து செடி முழுவதும் நனையும்படி தெளிக்கவேண்டும். பருத்திச் செடிகளின் அருகில் சாகுபடியில் உள்ள வெற்றிலை கொடிக்கால் வேலிச் செடிகளிலும் இவற்றினை தெளிக்கவேண்டும்.

புரோபனேஸô்ஸ் 50 இசி 2 மி.லி. தண்ணீர் அல்லது குளோர்பைரிபாஸ் 20 இசி 4 மி.லி. தண்ணீர் அல்லது புப்ரோமைசின் 25 எஸ்ஸி 0.75 மி.லி. தண்ணீர் அல்லது டைமெதோயேட் 2.0. மி.லி. தண்ணீர் அல்லது இமிடோகுளோரோபிரிட் 17 எஸ்எஸ் 0.8 மி.லி. தண்ணீர். இப் பூச்சிகொல்லி மருந்தினை திரும்ப திரும்ப உபயோகிக்காமல் சுழற்சி முறையில் வெவ்வேறு பூச்சிகொல்லி மருந்தினை உபயோகிக்கவேண்டும். பூச்சிகொல்லி மருந்து தெளிக்கும்போது லிட்டருக்கு 1 மி.லி. டீபால் அல்லது சான்டோவிட் ஒட்டும் திரவம் தெளிக்கவேண்டும்.

இம் மாவுப் பூச்சிகள் பப்பாளி, மா, கொய்யா, திராட்சை, அன்னாசி, வாழை, கத்தரி, தக்காளி, முட்டைகோஸ், பீன்ஸ், மரவள்ளி, செம்பருத்தி மற்றும் பூச்செடிகள், அழகு பூச்செடிகள் ஆகியவற்றை தாக்கி சேதம் உண்டாக்கும்.

எனவே இப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டவுடன் விவசாயிகள் கூட்டு முயற்சியுடன் மேற்கண்ட மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

**தாலுகா தோறும் மண் புழு இயற்கை உரம் தயாரிப்பு: விவசாயிகளுக்கு அரசு ஆதரவு**

First Published : 27 May 2010 10:29:06 AM IST

கமுதி, மே,26: ராமநாதபுரம் மாவட்டத்தில் தாலுகா தோறும் மண் புழு இயற்கை உரம் தயாரிக்க, விவசாயிகளை ஊககுவிக்கும் வகையில் அரசு மானியத் தொகை வழங்கி ஆதரவளிக்கிறது.

இயற்கை உரங்கள்தான் நெல், கரும்பு, மிளகாய், வாழை உள்ளிட்ட பல்வேறு பயிர்களுக்கு நல்ல ஊட்டச் சத்து, கிடைக்கச் செய்து, நல்ல வளர்ச்சியை அளிக்கின்றன. எனவே, இயற்கை உரங்களையே விவசாயிகள் அதிகம் நாடுகின்றனர்.

இயற்கை உரங்களில் மண் புழு உரமும் ஒரு வகை ஆகும். கடந்த 2 ஆண்டுகளாக ராமநாபுரம் மாவட்டத்தில் வேளாண் துறை அதிகாரிகள், கிராமங்களுக்குச் சென்று மண்புழு உரம் தயாரிப்பு முறையை விளக்கி, உரம் தயாரிக்க அரசு மானியத் தொகை ரூ. 30,000 கிடைப்பதற்கு உதவி வருகின்றனர். சுமார் 1,000 கிலோ எடை மண்புழு உரம் தயாரிக்கும் வகையில் தொட்டி அமைத்தோ அல்லது பள்ளம் தோண்டியோ அதில் குப்பை மற்றும் மண் போட்டு, அதில் ஏராளமான மண்புழுக்களை விடச்செய்கின்றனர். சுமார் 45 நாட்கள் முதல் 60 நாட்களில் மண் புழுக்கள் வெளியேற்றும் கழிவுகள் சேர்ந்து அருமையான இயற்கை உரம் தயாராகி விடுகிறது.

பின்னர் இந்த உரத்தை தோண்டி வெளியே எடுத்து வயல்களில் போட்டால் பயிர்கள் செழிப்புடன் வளர்வதைக் காணமுடிகிறது. ஒரு தடவை மண் புழுக்களைச் சேகரித்து கொண்டுவந்த பின்பு அவற்றையே திரும்பத்திரும்ப பயன்படுத்தி மண் புழு இயற்கை உரம் தயாரிக்க முடிகிறது. கமுதி உதவிக்கோட்ட வேளாண் துறை உதவி இயக்குனர்(பொறு0பபு) சுப்பையா வழிகாட்டுதலில் இதுவரையிலும் 8 கிராமங்களில் மண் புழு இயற்கை உரம் தயாரிப்ப தற்கு வேளாண் துறை அதிகாரிகள் உதவியாக இருந்து வருகின்றனர்.

**அதிக மகசூல் தரும் குழித்தட்டு நாற்றங்கால் முறை**

First Published : 27 May 2010 10:28:46 AM IST

தோட்டக்கலைப் பயிர்களின் இனப்பெருக்க முறையான நாற்றங்கால் உற்பத்தியை நம் விவசாயிகள் வழக்கமான முறையில் நாற்றுகளை அகலப்பாத்தி அல்லது மேட்டுப்பாத்தி மூலம் திறந்தவெளியில் நேரடியாக உற்பத்தி செய்யும் போது, நாற்றுகள் மெலிந்தும் வீரியம் குறைந்தும் காணப்படுவதால் தரமான நாற்றுகள் இல்லாமல் உற்பத்தி குறைவதுடன் பராமரிப்பு செலவும் அதிகமாகிறது. இந்த குறைபாட்டினை களைய உருவாக்கப்பட்டதுதான் குழித்தட்டு நாற்றங்கால் முறை.

மண்ணில் நாற்றுகளை நேரடியாக வளர்க்கும் போது மண் இறுக்கமாக இருப்பதுடன் மண்ணில் உள்ள நோய் பரப்பும் பூசணங்கள் எளிதில் நாற்றுகளை தாக்கி சேதம் விளைவிக்கும். எனவே, நாற்றுகளை குழித்தட்டுகளில் தனித்தனியாக போதுமான இடைவெளியுடன் வளர்ப்பதால் நோய் பரவுவது குறைந்து நாற்றுகள் வாளிப்பாக தரமுடன் வளரும்.

குழி தட்டு நாற்றங்கால் முறையில் நிழல் வகை குடில் அமைத்து குழித்தட்டுகளில் பாதுகாப்பான சூழலில் நாற்றுகளை உற்பத்தி செய்ய வேண்டும். சமவெளிப் பகுதியில் 50 விழுக்காடு நிழல் தரும் பச்சை நிற வலையும், மலைப் பிரதேசங்களில் 30 விழுக்காடு நிழல் தரும் கருப்பு நிற நிழல் வலையும் உகந்தது. காய்கறிப் பயிர்களுக்கு 0.8 மி.மீ தடிமன் கொண்ட 98 குழிகள் உள்ள குழித்தட்டுகள் ஏற்றது. இத்தட்டுகளில் அதிகப்படியான நீர் வழிந்து செல்ல ஏதுவாக அடியில் இரண்டு துவாரங்கள் இருக்கும். மேலும் இத்தட்டுக்களை எளிதாக மடக்கி வண்டிகளில் அடுக்கி எடுத்துச் செல்லஇயலும்.

நாற்றுகளை வளர்க்க மண்ணிற்கு பதிலாக நன்கு பதப்படுத்தப்பட்ட தென்னை நார்க்கழிவை வளர் ஊடகமாகப் பயன்படுத்தலாம். தென்னை நார்க்கழிவானது விலை மலிவாகவும், நாற்று உற்பத்திக்கு ஏற்றதாகவும் உள்ளது. தென்னை நார்க்கழிவானது அதிகப்படியான நீரை வடித்து விடுவதுடன் நாற்றுக்குத் தேவையான ஈரப்பதத்தை தொடர்ந்து தருகிறது. இதனால்,வேர் எவ்வித தடையுமின்றி சீராக வளர்கிறது.

குழித்தட்டு நாற்றங்காலின் நான்கு பக்கமும் வைரஸ் நோய்களை பரப்பும் பூச்சிகள் மற்றும் நாற்றுகளைத் தாக்கும் பூச்சிகளை நாற்றாங்காலில் உட்புகாதவாறு நைலான் வலை கொண்டு பாதுகாக்க வேண்டும்.

குழித்தட்டு நாற்றங்கால் மூலம் காய்கறிப் பயிர்கள், பூக்கள் மற்றும் அனைத்து நாற்றுவிட்டு நடவு செய்யும் பயிர்களையும் உற்பத்தி செய்யலாம். தேர்வு செய்யப்பட்ட காய்கறி விதைகளை சூடோமோனாஸ் பூஞ்சான கொல்லியினால் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

குழித்தட்டுகளில் நன்கு பதப்படுத்தப்பட்ட போதுமான தென்னை நார்க்கழிவை நிரப்பி 1-2 செ.மீ ஆழத்தில் விதைகளை குழிக்கு ஒரு விதை என்ற அளவில் இட்டு மறுபடியும் நார்க்கழிவின் மூலம் விதைகளை மூடி பின்னர் குழித்தட்டுகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வெளிச்சம் உட்புகாதவாறுபாலித்தீன் தாள் கொண்டு 5 நாட்களுக்கு மூடி வைக்க வேண்டும். ஐந்தாம் நாள் விதை முளை வெளிவர ஆரம்பிக்கும் சமயம் இத்தட்டுகளை நிழல் வலை நாற்றங்காலில் அடுக்கி வைக்க வேண்டும்.

தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் பூவாளி கொண்டு நீர் தெளிக்க வேண்டும். நன்கு பாதுகாக்கப்பட்ட நாற்றங்காலில் பொதுவாக நோய் மற்றும் பூச்சி தாக்குதல் இருக்காது. சில நேரம் அரிதாக வேரழுகல் நோய் இருப்பின் காப்பர் ஆக்ஸி குளோரைடு 2 கிராம்/லிட்டர் என்றளவில் தண்ணீருடன் கலந்து ஊற்ற வேண்டும்.

தக்காளி, மிளகாய் போன்ற காய்கறிப் பயிர்களில் சிலசமயம் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் இருப்பின் இமிடாகுளோபிரிட் 0.5 மிலி / லிட்டர் அல்லது டிரையசோபாஸ் 1.5 மிலி / லிட்டர் என்றளவில் தண்ணீருடன் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

நாற்றுகளின் வளர்ச்சி கோடைக்காலத்தில் விரைவாகவும், குளிர் காலத்தில் குறைவாகவும் காணப்படும். நாற்றுகளை நாற்றங்காலில் சரியான நேரத்தில் எடுத்து நடவு செய்ய வேண்டும். மிகவும் முற்றிய நாற்றுகளை நடவு செய்தால் மகசூல் குறையும். தக்காளி பூக்கோசு, தர்பூசணி நாற்றுகளை 25 முதல் 30 நாட்களிலும், மிளகாய், குடைமிளகாய், பஜ்ஜி மிளகாய், கத்தரி விதைகளை 35 முதல் 40 நாட்களிலும், வெங்காய நாற்றுகளை 20 முதல் 25 நாட்களிலும் நடவு செய்ய ஏற்றது.

நன்கு வளர்ச்சி அடைந்த வயது வந்த நாற்றுகளை நாற்றுத்தட்டுகளோடு வண்டியில் வைத்து நடவு வயலுக்கு எவ்வித சேதமுமின்றி எடுத்து செல்ல இயலும். வழக்கமான அகலப்பாத்தி அல்லது மேட்டுப்பாத்தி நாற்றங்கால் முறையினை விட குழித்தட்டு நாற்றாங்கால் முறையில் கிட்டத்தட்ட 30-40 விழுக்காடு விதையளவு குறைவாக தேவைப்படுகிறது. இம்முறையில் நாற்றுக்கள் ஒரே சீராக, செழிப்பாக, திடகாத்திரமாக, நன்கு வீரியமிக்கதாக இருப்பதால் அதிக மகசூல் பெற முடியும்

தினமலர்

**பருத்தி நூல் ஏற்றுமதி தடைக்கு "சிட்மா' வலியுறுத்தல்**

ஈரோடு: "பருத்தி நூல் விலை மீண்டும் உயர்வதால், நூல் ஏற்றுமதியை உடனடியாக தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என மத்திய அரசுக்கு தென்னிந்திய ஜவுளி சங்கம் (சிட்மா) வலியுறுத்தியுள்ளது. "சிட்மா' தலைவர் மதிவாணன் கூறியதாவது: கடந்த சில மாதங்களாக பருத்தி நூல் விலை அபரிமிதமாக உயர்ந்துள்ளது. இதனால், நூல்

உபயோகிக்கும் தொழில்களான கைத்தறி, விசைத்தறி, பின்னலாடை துறையினர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உயர்ந்த விலையிலும் கூட தேவையான நூல் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. இதை சரி செய்ய மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை விடுத்ததின்படி, நூல் ஏற்றுமதிக்கு கொடுக்கும் ஊக்கத்தொகையை மத்திய அரசு நிறுத்திக் கொண்டது. அதேசமயம், கச்சா பருத்தி ஏற்றுமதியையும் தற்காலிமாக தடைசெய்தது. பதிவு செய்த ஏற்றுமதியாளர்கள்தான் பருத்தி நூல் ஏற்றுமதி செய்ய வேண்டுமென கட்டுப்பாடு விதித்து, கழிவு பஞ்சு ஏற்றுமதியையும் ரத்து செய்தது. இதன் மூலம் கச்சா பருத்தியின் விலை குறைந்த அளவுக்கு, நூல் விலை குறையவில்லை. நூல் ஏற்றுமதிக்கு கொடுக்கப்பட்ட ஊக்கத்தொகை விலக்கி கொண்டதாலும் ஏற்றுமதி குறையவில்லை. இதனால், நெசவாலைகளுக்கு கிடைக்கூடிய நூலுக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. இதனால், ஐம்பது முதல் அறுபது சதவீதம் நூல் விலையேற்றம், ஐந்து சதவீதத்திலிருந்து 10 சதவீதம் குறைந்துள்ளது.

நூல் ஏற்றுமதி செய்யப்படுவதும், நம் நாட்டு உற்பத்திக்கு கிடைக்கக்கூடிய நூலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதும் காரணம். பருத்தி நூல் ஏற்றுமதியை முழுமையாக தடை செய்ய வேண்டும். அல்லது ஏற்றுமதியை தடை செய்யாமல், ஏற்றுமதி வரியை 15 சதவீதமாக உயர்த்தினால், அரசுக்கு வருமானமும், நூல் ஏற்றுமதி குறைந்து நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க வாய்ப்புள்ளது. பருத்தி ஏற்றுமதிக்கு கொண்டு வரப்பட்ட தடையை நீக்க ஏற்றுமதியாளர்கள் தீவிர முயற்சி செய்கின்றனர். அதற்கு இணங்காமல் கச்சா பருத்தி ஏற்றுமதியை தடை செய்வதை மத்திய அரசு நீடிக்க வேண்டும். நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாட்டை நீக்கி, மத்திய அரசு உடனடியாக நூல் விலையை தடை செய்ய வேண்டும். மேலும், யூக வணிகத்தினர் மூலம் கச்சா பருத்தி விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**விரிவாக்க மையங்களில் மானிய விலை விதைகள்**

தேனி: மாவட்டத்தில் உள்ள விரிவாக்க மையங்களிலும் மானிய விலையில் விதைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. முதல் போக சாகுபடிக்கு தேவையான ஐ.ஆர்., 50, நெல் ஏ.டி.டி., 36, 2ம் போகத்திற்கு தேவையான ஏ.டி.டி., 39, கோ- 43, ஏ.டி.டி., 45, மற்றும் கம்பு (ஐ.சி.எம்.பி., 221), துவரை, உளுந்து, பாசிப்பயறு, கே.எம்., 2, கோ-6, கோ- 7, தட்டப்பயறு, பருத்தி, எஸ்.வி.பி.ஆர்., 2, எம்.சி.யு., 12, சுப்ரியா, நிலக்கடலை விதைகள் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன. பயறு வகை விதைகளுக்கு கிலோவிற்கு 20 ரூபாய் மானியம், நிலக்கடலை விதைக்கு 12 ரூபாய் மானியம், நெல் விதைக்கு 5 ரூபாய் மானியம், பருத்தி விதைக்கு 25 சதவீத மானியத்திலும் விரிவாக்க மையங்களில் வழங்கப்படுகின்றன.

**மணல் குவாரியால் விவசாய கிணறுகளில் குறையும் நீர் மட்டம்: விவசாயிகள் பாதிப்பு**

சேத்தூர்: சேத்தூர் அருகே தேவதானம் நகரியாறு பகுதியில் நடத்தப்படும் அரசு மணல் குவாரியால் அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

சேத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள ஆறுகள், ஓடைகளில் திருட்டு மணல் அதிகளவில் எடுக்கப்பட்டது. இதை தடுக்க, சில மாதங்களுக்கு முன், நகரியாற்றில் மணல் குவாரி அமைக்க அரசு அனுமதித்தது. ராஜபாளையம் மட்டுமல்லாது திருநெல்வேலி எல்லையோர பகுதிகளிலிருந்தும், கட்டட பணிகளுக்கு இங்கு வந்து மணல் வாங்கிச் சென்றனர். மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து தண்ணீருடன் அடித்து செல்லப்படும் மணல், பெருமளவில் சாஸ்தா கோயில் அணைக்கு மேற்கே உள்ள பகுதியில் குவிந்து கிடக்கும். இந்த மணலை அள்ளுவதற்கு தான் குவாரி அமைக்கப் பட்டது. ஆனால், அந்த மணலை அள்ளத்துவங்கிய பின், அப்பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருவதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிப்பு: பொதுவாக தென்மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவ மழை ஆகிய இரண்டு சீசன்களிலும் நகரியாற்றில் தண்ணீர் வரத்து காணப்படும். இதனால் சாஸ்தா கோயில் அணையிலிருந்து தண்ணீர் பெறும் கண்மாய், குளங்களிலும் அதிக நாட்கள் தண்ணீர் இருக்கும். தேவதானம் மற்றும் சுற்றவட்டாரப் பகுதிகளில் இரண்டு போக நெல் சாகுபடி அமோகமாக இருக்கும். ஆனால், தற்போது மணல் குவாரி அமைந்துள்ள பகுதியையொட்டி உள்ள வயல்களில், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது.

இதுகுறித்து விவசாயி பேச்சிமுத்து கூறியதாவது: எனக்கு இப்பகுதியில் எட்டு ஏக்கர் தென்னந்தோப்பு, எட்டு ஏக்கர் நெல் வயல் உள்ளது. இரண்டாம் போகமாக நெல் பயிரிட்டுள்ளேன். முன்பு 6 மணி நேரத்திற்கும் குறையாமல் தண்ணீர் பாய்ச்ச முடிந்தது. தற்போது ஒரு மணியிலிருந்து 3 மணி நேரம் பாய்ச்சும் அளவிற்கே தண்ணீர் உள்ளது. நிலத்தடி நீர், ஊற்றிலிருந்து ஊறியவுடன் காத்திருந்து தண்ணீர் எடுக்க வேண்டியுள்ளது. என்னைப் போல் மணல் குவாரி அருகே நிலம் வைத்துள்ள விவசாயிகளின் 400 ஏக்கர்களுக்கும் இதே நிலை தான் உள்ளது, என்றார்.

**மணக்குது குண்டு மல்லிகை விலை: மலரும் காரியாபட்டி விவசாயிகள்**

காரியாபட்டி: காரியாபட்டி குண்டு மல்லிகைக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.காரியாபட்டி மற்றும் வலையங்குளம், பாரைப்பத்தி, இலுப்பைகுளம், வெள்ளாகுளம், சுந்தரங்குண்டு பகுதியில் அதிக அளவில் குண்டு மல்லிகை பயிரிடப்பட்டுள்ளது. இதற்கான பதியங்கள் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், தங்கச்சிமடம் பகுதியிலிருந்து வாங்கப்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிக்கும் இங்கிருந்துதான் பதியங்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. ஏக்கருக்கு 4 ஆயிரம் பதியங்கள் நடுகின்றனர். நல்ல இயற்கை உரங்கள் இட்டு வந்தால் 25 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். செயற்கை உரங்கள் இட்டால் 10 ஆண்டுகளுக்குத்தான் பலன் கிடைக்கும்.

கோடை காலம்தான் மல்லிகை பூக்களுக்கு சீசனாக உள்ளது. ஆகஸ்ட் வரை நல்ல விளைச்சல் இருக்கும். வறண்ட பூமியிலும் மல்லிகை பயிரிட்டால் விளைச்சல் அமோகமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மாவட்டங்கள்தான் மல்லிகைக்கு சிறந்த இடங்களாக உள்ளன. முன்பு ஆயிரக்கணக்கான ஏக்கரில் மல்லிகை செடிகள் பயிரிட்டனர். காலப்போக்கில் மழை அளவு குறைந்து நிலத்தடி நீர் பாதிக்கப் பட்டதால் பூ விவசாயம் பாதிக்கப்பட்டது. பூப்பறிக்க ஆட்கள் பற்றாக்குறையும் ஒரு காரணம்.

இங்கு விளையும் மல்லிகை பூக்கள் அதிகாலையில் பறிக்கப் பட்டு விமானம் மூலம் மும்பை, டில்லிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அங்கும் மதுரை குண்டு மல்லிகளுக்கு நல்ல கிராக்கி உள்ளதால் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. விவசாயம் அதிக அளவு இல்லாததால் மதுரை மார்க்கெட்டுக்கு குண்டு மல்லி வரத்து குறைந்து காணப்படுகிறது. இருப்பினும் அதிக விசேஷ நாட்கள் உள்ளதால் கிலோ 150 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதிக விளைச்சல் உள்ள நேரத்தில் இங்குள்ள "சென்ட்' கம்பெனிகள் விலைக்கு வாங்கி "ஆயில்' தயார் செய்து பிரான்ஸ் சந்தைக்கு அனுப்பி வைக்கின்றனர். அங்கு இந்த குண்டு மல்லிகளில் தயார் செய்த ஆயிலுக்கு கிராக்கி இருந்து வருகிறது. பூக்கள் மலர்ந்தது போல் நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகளின் முகமும் மலர்ந்துள்ளது.

இதுகுறித்து ஜெயப்பிரகாஷ் கூறியதாவது: எந்த மண்ணுக்கும் ஏற்ற ஒரே விவசாயம் மல்லிகை தான். குறைந்த அளவு தண்ணீரில் நல்ல விளைச்சல் காணலாம். ஒரு குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தால் போதும். மாதம் 20 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம். வேலை ஆட்கள் தேவையில்லை. இப்பகுதியில் விளையும் மல்லிகள் தற்போது உள்ளூர் மார்க்கெட்டை நம்பி உள்ளன. மதுரை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக செயல்பட துவங்கினால் வெளி நாடுகளுக்கு விவசாயிகள் நேரிடையாக அனுப்ப முடியும். அவ்வாறு அனுப்பும் பட்சத்தில் விவசாயிகளும்சரி, இந்த நாட்டிற்கும் சரி அன்னிய செலாவணி கிடைப்பதுடன் நல்ல வருவாய் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மல்லிகைக்கு சாகுபடி மையம் கிடையாது. இதனால் மாவட்டத்தில் மல்லிகை வளர்ச்சி கழகம் தொடங்க வேண்டும். மல்லிகை விவசாயத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும், என்றார்.

**மானிய விலையில்விதை நெல் வினியோகம்**

திருநெல்வேலி:சேரன்மகாதேவி பகுதியில் விதை நெல் மற்றும் சிங்க் சல்பேட் மானிய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.இதுகுறித்து சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ் அறிக்கையில் கூறியிருப்பதாவது:சேரன்மகாதேவி வட்டார பகுதிகளில் தற்போது கார்நெல் சாகுபடி பணிகள் துவங்க உள்ளது. கார்நெல் சாகுபடிக்கு தேவையான ஆடுதுறை 45 மற்றும் அம்பை 16 நெல் விதைகள் கிலோ ஒன்றிற்கு ரூ.5 மானியத்தில் சேரன்மகாதேவி மற்றும் வீரவநல்லூர் வேளாண் விரிவாக்க மையங்களில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.மேலும் 50 சதவீத மானிய விலையில் சிங்க சல்பேட் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே சேரன்மகாதேவி வட்டார விவசாயிகள் மானிய விலையில் நெல் விதைகளை வாங்கி பயனடையலாம். மேலும் குறைந்த செலவில் செம்மை நெல் சாகுபடி முறையை மேற்கொள்ள விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மீண்டும் பருத்தி ஏற்றுமதிக்கு முயற்சி? ஜவுளி உற்பத்தியாளர்கள் கண்டனம்**

திருப்பூர் : லைசென்ஸ்' பெற்று பருத்தி ஏற்றுமதி செய்யலாம்' என்ற மத்திய அரசு முடிவால், பஞ்சு ஏற்றுமதி மீண்டும் அதிகரித்து, வரும் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் பஞ்சு மற்றும் நூல் தட்டுப்பாடு பல மடங்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளது," என கோவை-திருப்பூர் மாவட்ட விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்க கூட்டுக்கமிட்டி பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

கடந்த பருத்தி சீசனின் போது, அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியாவில் அதிக பருத்தி விளைந்திருந்தது. மத்திய அரசின் அறிவிப்பில், பருத்தி விளைச்சல் 292 லட்சம் பேல், இறக்குமதி ஏழு லட்சம் பேல், பழைய இருப்பு 71 லட்சம் பேல் என, மொத்தம் 370 லட்சம் பேல் பருத்தி கையிருப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஜவுளித்துறை கமிஷனர் அலுவலகத்தில், உள்நாட்டு தேவைக்கு 240 லட்சம் பேல், ஏற்றுமதி அனுமதி பெற்றது 85 லட்சம் பேல் என, 325 லட்சம் பேல் பருத்திக்கு கணக்கிடப்பட்டது. மொத்தமுள்ள 370 லட்சம் பேல் பருத்தியில், அதிகபட்சமாக, 50 லட்சம் பேல் அளவிற்கு மட்டும் கையிருப்பு இருக்கும் என கணிக்கப்பட்டது.

நிலைமை மோசமாகிறது என்பது தெரிந்து, நூற்பாலைகள் கேட்டபோது, "வரும் பருத்தி சீசனின் போது, 50 லட்சம் பேல் பருத்தி கையிருப்பு வைக்கப்படும் அளவிற்கு பருத்தி விளைச்சல் உள்ளது' என மத்திய அரசு உறுதி தெரிவித்தது. பிரச்னை எல்லை தாண்டியதால், இறுதியாக ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது.

தற்போதைய, மத்திய ஜவுளித்துறை கமிஷன் அறிவிப்பு படி, ஏற்றுமதிக்கு பதிவு செய்யப்பட்டிருந்த, 85 லட்சம் பருத்தியில், 67.50 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதியாகி விட்டது;12.50 லட்சம் பேல் பருத்தி மீதியுள்ளது. இந்நிலையில், பதிவு செய்யப்பட்ட பருத்தியை மீண்டும் எப்படி ஏற்றுமதி செய்வதென, சிலர் மறைமுக முயற்சி மேற்கொள்வதாக திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் புகார் தெரிவித்திருந்தது.

பருத்தி ஏற்றுமதிக்காக பதிவு செய்ய வேண்டும் எனில், மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கமிஷன் பிரிவில் முன்பதிவு செய்ய வேண்டும். அங்கீகரிக்கப்படும் பதிவு அளவுகள் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படும்.மீண்டும்

பருத்தி ஏற்றுமதிக்கு வழிவகுக்கும் வகையில், வழக்கமான பதிவு முறைகளில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. பருத்தி ஏற்றுமதிக்கு பதிவு செய்வதில் புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி, வணிகத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும், வெளிநாட்டு வர்த்தக பிரிவு பொது இயக்குனர் (டைரக்டர் ஜெனரல் ஆப் ஃபாரின் டிரேடிங்) அலுவலகத்தில், சிறப்பு உரிமம்(லைசென்ஸ்) பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பனியன் ஏற்றுமதியாளர்கள் கூறியதாவது:பருத்தி ஏற்றுமதிக்கு மீண்டும் அனுமதி பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தில் சிலர் மறைமுக முயற்சிகளை மற்கொண்டு வருகின்றனர்.

மத்திய அரசும் அவர்களுக்கு சாதகமாக செயல்பட்டால், மீண்டும் பருத்தி ஏற்றுமதிக்கு தட்டுப்பாடு அதிகமாகிவிடும். இதனால், ஒட்டுமொத்த பனியன் தொழிலும்,"ஜாப் ஒர்க்' நிறுவனங்களும் காணாமல் போய்விடும் அபாயம் உள்ளது.பருத்தி ஏற்றுமதிக்கான முன்னேற்பாடுகளில், அதிரடி மாற்றம் செய்யப்பட்டாலும், தற்போதைய பாதிப்பு நிலையை உணர்ந்து, மத்திய அரசு பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க கூடாது, என்றனர்.

கோவை-திருப்பூர் மாவட்ட விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்க கூட்டுக்கமிட்டி பொதுசெயலாளர் துரைசாமி கூறியதாவது:ஜவுளி உற்பத்தி வெகுவாக பாதிக்கப் பட்டிருந்தும், வணிகத்துறையில்"லைசென்ஸ்' பெற்று பருத்தி ஏற்றுமதி செய்யலாம் என மத்திய அரசு மறைமுகமாக அறிவித்துள்ளது. வடமாநிலங்களில் உள்ள சிலரது வற்புறுத்தலால், மத்திய அரசு பணிந்து வ்வாறு அறிவித்துள்ளது. இது ஒட்டுமொத்த ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும், நாட்டின் ஜவுளித்தொழில் வளர்ச்சிக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தும்.

பல்வேறு நடவடிக்கை எடுத்தும் நூல் விலையை குறைக்க முடியவில்லை. அதிகபட்சமாக, 30ம் நம்பர் வார்பு நூல், கிலோ 160 ரூபாயாக உயர்ந்திருந்தது. அரசு அறிவிப்புகளை தொடர்ந்து, கிலோவுக்கு 16 ரூபாய் வரை குறைந்து, 144 ரூபாய்க்கு கிடைத்தது. பருத்தி ஏற்றுமதிக்கு மறைமுக அனுமதி செய்தி பரவியவுடன், நூல் விலை உயர்ந்து, கிலோ 150 ரூபாயாக உயர்ந்துள்ளது. மத்திய அரசு எவ்வித யோசனையும் இல்லாமல், பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி கொடுத்தால், உள்நாட்டு தேவைக்கான பஞ்சுகளும் ஏற்றுமதியாகிவிடும்.

இதனால், வரும் செப்.,- அக்., மாதங்களில் பஞ்சு மற்றும் நூலுக்கு தட்டுப்பாடு பல மடங்கு அதிகரிக்கும். ஏற்கனவே, நூல்ஏற்றுமதியை தடைசெய்யவேண்டும் என உற்பத்தியாளர்கள் குரல்கொடுத்து வரும் வேளையில், தடைசெய்யப்பட்ட பருத்திக்கு மீண்டும் அனுமதி வழங்கியது பேராபத்தை ஏற்படுத்தும். மத்திய அரசு முடிவை பரிசீலனை செய்து, பஞ்சு, நூல் ஏற்றுமதிக்கு தடைவிதிக்க வேண்டும்.

நூல் விலையில் பெரும் சரிவு ஏற்படும் அபாயம் ஏற்படுமானால், 15 சதவீத ஏற்றுமதி தடை வரியுடன் நூல் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க வேண்டும். இத்தகைய நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இந்திய ஜவுளி வர்த்தகத்தை நிலைநிறுத்த முடியும். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு இழப்பீடு 31 முதல் நிவாரண முகாம்**

அவிநாசி : ஒரத்துப்பாளையம் அணை நீர் மாசுபட்டதால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான சிறப்பு முகாம், அந்தந்த கிராமங்களில் நடக்கிறது.அவிநாசி தாசில்தார் சென்னியப்பன் வெளியிட்டுள்ள அறிக்கை:அவிநாசி தாலுகாவில், நொய்யலாறு, ஒரத்துப்பாளையம் அணை நீர் மாசு பட்டதால், பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கும் முகாம் நடக்கிறது. பாதிப்படைந்த விவசாயிகள் இம்முகாம்களில் பங்கேற்று, சம்பந்தப்பட்ட புலத்தின் சிட்டா, ஆர்.எஸ்.ஆர்., நகல், கிரயம் அல்லது பாகபாத்திய விடுதலை போன்ற அசல் ஆவணங்கள் மற்றும் வில்லங்க சான்று, பசலிக்கான (1411 முதல் 1415 வரை) அடங்கல் நகல்கள், இழப்பீடு

கோரும் நபர் இறந்திருந்தால், அவரது இறப்பு நகல், வாரிசு சான்று நகல் மற்றும் பிற ஆவணங்களை விசாரணைக்கு கொண்டு வர வேண்டும்.

வரும் 31ம் தேதி புதுப்பாளையம், அடுத்த மாதம் முதல் தேதி கணியாம்பூண்டி, 2ம் தேதி ஏ.கத்தாங்கண்ணி, அணைப்பாளையம், 3ம் தேதி ஏ.பெரியபாளையம், எஸ்.பெரியபாளையம், 4ம் தேதி மொரட்டுப்பாளையம், ராக்கியாபாளையம், 5ம் தேதி புஞ்சை ஊத்துக்குளி, வடுகபாளையம், 7ம் தேதி எஸ்.கத்தாங்கண்ணி, 8ம் தேதி பல்லவராயன்பாளையம். இவ் வூராட்சிகளை சேர்ந்த பாதிக்கப்பட்ட விவசாயிகள், அந்தந்த தேதிகளில் கிராம நிர்வாக அலுவலகத்துக்குச் சென்று, உரிய ஆவணங்களுடன் ஆஜராக வேண்டும். இம்முகாம்களில் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்படும், என்று கூறியுள்ளார்.

**தீவனப்பயிருக்கு திண்டாடும் கால்நடைகள்**

தாராபுரம் : கோடை வெயில் மற்றும் அமராவதி பாசன நீர் கிடைக்காததால், கால்நடைகளுக்கு போதிய பசுந்தீவனங்கள் கிடைப்பதில்லை; தீவனங்களைத்தேடி கால்நடைகள் அலையும் நிலை தாராபுரம் பகுதியில் ஏற்பட்டுள்ளது.தாராபுரம் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களுக்கு, அமராவதி ஆறு, பழைய, புது ஆயக்கட்டு பாசன கால்வாய்கள் முக்கிய நீராதாரமாக இருந்து வருகின்றன. இப்பாசனங்கள் முலம் நெல், கரும்பு, சோளம் உட்பட பல்வேறு தானியங்களை சாகுபடி செய்து வருகின்றனர், இப்பகுதி விவசாயிகள்.

கோடையில் அமராவதி ஆற்றில் தொடர் நீரோட்டம் இன்றி, அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட்டால் மட்டுமே பாசனம் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். கிணறுகளிலும் நிலத்தடி நீர்மட்டம் 700 அடிக்கு கீழ் சென்று விட்டது.ஆண்டுக்கு ஆறு மாதம் மட்டுமே சாகுபடி இருப்பதால், கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனங்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது; இருப்பு வைத்த தீவனங்களையே கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டிய நிலை உள்ளது.

புண்ணாக்கு, பருத்திக்கொட்டை, தவிடு போன்ற தீவனங்களின் விலை உயர்வால், அவற்றை வாங்கிக் கொடுக்க முடியாமல், கால்நடை வளர்ப்போர் தவிக்கின்றனர். தற்போது, அமராவதி ஆற்றில் தொடர் நீரோட்டம் தடைபட்டுள்ளதால், வேளாண் நிலங்கள் காய்ந்து காணப்படுகிறன்றன; கால்நடை வளர்ப்போர், பொட்டல் காடுகளில் தங்களுடைய கால்நடைகளை மேயவிட்டு, அரை வயிற்றோடு கொட்டகைகளுக்கு ஓட்டி விடுகின்றனர்.ஓட்டல்களில் இருந்து அரிசி சுத்தம் செய்தபின் வெளியேறும் தண்ணீர், பழைய சாப்பாடு, அழுகிய காய்கறிகளை எடுத்துவந்து கால்நடைகளுக்கு கொடுக்கும் பரிதாபமான நிலையும் ஏற்பட்டுள்ளது.

பால் கொள்முதல் விலையை அதிகரிக்காததால், கால்நடை வளர்ப்போர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்; மேய்ச்சல் நிலங்களில் தீவனம் கிடைக்காததால், கால்நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்கும் நிலைக்கும் கால்நடை வளர்ப்போர் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், இப்பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது.

சில பெரிய விவசாயிகள் மட்டும் பண்ணை அமைத்து நூற்றுக்கணக்கான எருமை, ஆடு, கோழி போன்ற கால்நடைகளை , கூலிக்கு ஆட்களை வைத்து பாதுகாத்து வருகின்றனர். கால்நடை வளர்ப்போர் நலன் கருதி மானிய விலையில் பருத்தி, புண்ணாக்கு, தவிடு போன்ற தீவனங்களை வழங்க வேண்டும். பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும் என்று, கால்நடை வளர்ப்போர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தீவனப்பயிருக்கு திண்டாடும் கால்நடைகள்**

தாராபுரம் : கோடை வெயில் மற்றும் அமராவதி பாசன நீர் கிடைக்காததால், கால்நடைகளுக்கு போதிய பசுந்தீவனங்கள் கிடைப்பதில்லை; தீவனங்களைத்தேடி கால்நடைகள் அலையும் நிலை தாராபுரம் பகுதியில் ஏற்பட்டுள்ளது.தாராபுரம் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களுக்கு, அமராவதி ஆறு, பழைய, புது ஆயக்கட்டு பாசன கால்வாய்கள் முக்கிய நீராதாரமாக இருந்து வருகின்றன. இப்பாசனங்கள் மூலம் நெல், கரும்பு, சோளம் உட்பட பல்வேறு தானியங்களை சாகுபடி செய்து வருகின்றனர், இப்பகுதி விவசாயிகள்.

கோடையில் அமராவதி ஆற்றில் தொடர் நீரோட்டம் இன்றி, அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட்டால் மட்டுமே பாசனம் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். கிணறுகளிலும் நிலத்தடி நீர்மட்டம் 700 அடிக்கு கீழ் சென்று விட்டது.ஆண்டுக்கு ஆறு மாதம் மட்டுமே சாகுபடி இருப்பதால், கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனங்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது; இருப்பு வைத்த தீவனங்களையே கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டிய நிலை உள்ளது.

புண்ணாக்கு, பருத்திக்கொட்டை, தவிடு போன்ற தீவனங்களின் விலை உயர்வால், அவற்றை வாங்கிக் கொடுக்க முடியாமல், கால்நடை வளர்ப்போர் தவிக்கின்றனர். தற்போது, அமராவதி ஆற்றில் தொடர் நீரோட்டம் தடைபட்டுள்ளதால், வேளாண் நிலங்கள் காய்ந்து காணப்படுகிறன்றன; கால்நடை வளர்ப்போர், பொட்டல் காடுகளில் தங்களுடைய கால்நடைகளை மேயவிட்டு, அரை வயிற்றோடு கொட்டகைகளுக்கு ஓட்டி விடுகின்றனர்.ஓட்டல்களில் இருந்து அரிசி சுத்தம் செய்தபின் வெளியேறும் தண்ணீர், பழைய சாப்பாடு, அழுகிய காய்கறிகளை எடுத்துவந்து கால்நடைகளுக்கு கொடுக்கும் பரிதாபமான நிலையும் ஏற்பட்டுள்ளது.

பால் கொள்முதல் விலையை அதிகரிக்காததால், கால்நடை வளர்ப்போர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்; மேய்ச்சல் நிலங்களில் தீவனம் கிடைக்காததால், கால்நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்கும் நிலைக்கும் கால்நடை வளர்ப்போர் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், இப்பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது.

சில பெரிய விவசாயிகள் மட்டும் பண்ணை அமைத்து நூற்றுக்கணக்கான எருமை, ஆடு, கோழி போன்ற கால்நடைகளை , கூலிக்கு ஆட்களை வைத்து பாதுகாத்து வருகின்றனர். கால்நடை வளர்ப்போர் நலன் கருதி மானிய விலையில் பருத்தி, புண்ணாக்கு, தவிடு போன்ற தீவனங்களை வழங்க வேண்டும். பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும் என்று, கால்நடை வளர்ப்போர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## ஊட்டி ரோஜா பூங்காவில் குவியும் சுற்றுலா பயணிகள்



ஊட்டி ரோஜா பூங்காவில் மலர்களை கண்டு ரசிக்கும் சுற்றுலா பயணிகளை படத்தில் காணலாம்.

ஊட்டி, மே.28–
ஊட்டி ரோஜா பூங்காவில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது.

கோடை சீசன்

'மலைகளின் அரசி' என்று அழைக்கப்படும் நீலகிரி மாவட்டம் ஊட்டியில் சீசன் களை கட்டியுள்ளது. ஊட்டிக்கு இயற்கை அழகையும், கோடை சீசனையும் அனுபவிக்க வரும் சுற்றுலா பயணிகள் சுற்றுலா தலங்களான அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, தொட்டபெட்டா போன்ற இடங்களை கண்டு ரசிப்பதுடன், ஊட்டி ஏரியில் படகு சவாரி செய்தும் மகிழ்கின்றனர்.

ஊட்டியில் கோடை சீசனை முன்னிட்டு கடந்த 8–ந் தேதி ஊட்டி ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சி, 14–ந் தேதி மலர் கண்காட்சி, குன்னூரில் 22–ந் தேதி பழக்கண்காட்சி போன்றவை நடத்தப்பட்டன. இந்த விழாக்கள் நிறைவு பெற்றாலும் ஊட்டியில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாகவே உள்ளது.

கூட்டம் அதிகரிப்பு

ஊட்டி ரோஜா பூங்காவில் 2800–க்கும் மேற்பட்ட ரோஜா ரகங்களில் 36 ஆயிரம் ரோஜா செடிகள் நிறைந்து உள்ளன. இந்த பூங்காவில் மக்களின் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் அழகான ரோஜா செடிகளும், காதலர்களை கவர்ந்து இழுக்கும் வெள்ளை இளம் சிவப்பு ரோஜா மலர்களும், மஞ்சள், இளம் சிவப்பு, கருநீலம் வகையான ரோஜா மலர்களும் தற்போது பூத்து குலுங்குகிறது.

இந்த அழகான ரோஜா மலர்களை கண்டு ரசிக்க குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ரோஜா பூங்காவுக்கு வருகிறார்கள். இதனால் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக உள்ளது.

கோடை சீசனை முன்னிட்டு கடந்த ஏப்ரல் மற்றும் இந்த மே மாதம் சேர்த்து 2½

லட்சம் சுற்றுலா பயணிகள் ஊட்டி ரோஜா பூங்காவுக்கு வருகை தந்து உள்ளனர். தொடர்ந்து சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரித்து வருகிறது.

## கூடலூர் நகர சாலைகளில் கால்நடைகளை மேயவிடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் நகர்மன்ற கூட்டத்தில் முடிவு

கூடலூர்,மே.28–
கூடலூர் நகர சாலை களில் கால்நடைகளை மேயவிடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என நகர்மன்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.
நகர்மன்ற கூட்டம்
கூடலூர் நகர் மன்ற கூட்டம் மன்ற தலைவர் அன்ன புவனேசுவரி தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது. கூட்டத்தில் செயல் அலுவலர் ரஜனி, கவுன்சிலர் கள் ஜெயகுமார், ஜான்பால், உஸ்மான், ஆண்டனி உள்பட வார்டு கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கூடலூர் நகர சாலைகளில் கால்நடைகள் மேய்ந்து போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுகிறது. பலமுறை புகார் தெரிவித்தும் எந்தவித நடவ டிக்கை எடுக்கப்பட வில்லை என பெரும்பாலான கவுன்சி லர்கள் புகார் தெரிவித்தனர்.
மேயவிடுவோர் மீது நடவடிக்கை
இதையொட்டி கூடலூர் நகரில் கால்நடைகளை மேய விடுவதை தடை செய்ய வேண்டும். கால்நடைகளை மேய விடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத் தப்பட்டது. வருகிற 11–ந் தேதி கூடலூர் சுங்கம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆடு, கோழி, இறைச்சி விற்பனை கடைகளுக்கு ஏலம் நடை பெறும் என அறிவிக்கப்பட் டது.
கூட்டத்தில் கவுன்சிலர் உஸ்மான், அனுப்கான் கூறும் போது, கூடலூரில் குப்பை கொட்டுவதற்கு இடம் தேர்வு செய்வதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் நகராட்சி அலுவல கத்தில் பழைய கட்டிடங்களில் உள்ள தகரங்கள் காணவில்லை என கூறினர்.
கவுன்சிலர் வெளிநடப்பு
முன்னதாக கூட்டத்தில் இருந்து 14–வது வார்டு கவுன்சிலர் யோகராஜ் தனது வார்டு பகுதிக்கு சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து எந்தவித வளர்ச்சி பணிகளும் மேற் கொள்ளப்பட வில்லை என கூறி மன்ற கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

## நீலகிரி மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்க அனைத்து தரப்பு மக்களும் ஒத்துழைப்பு தர வேண்டும் அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் தீர்மானம்

ஊட்டி, மே.28–
நீலகிரி மாவட்டத்தில் இயற்கை வளங்களை பாதுகாக்க அனைத்து தரப்பு மக்களும் ஒத்து ழைப்பு தர வேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
கூட்டம்
நீலகிரி மாவட்டத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்களின் குடிநீர், மின் இணைப்பு துண்டிக் கப்பட்டன. இது தொடர் பாக அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டு நடவ டிக்கை குழு சென்னை சென்ற துணை முதல்– அமைச்சரரை சந்தித்தது. இந்த நிலையில் ஊட்டியில் நேற்று அனைத்து அரசியல் கட்சி களின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாவட்ட தலைவர் வக்கீல் ஜே.பி.சுப்பிரமணி தலைமை தாங்கினார்.
முன்னாள் அரசு கொறடா பா.மு.முபாரக், ஊட்டி நகர்மன்ற தலைவர் ராஜேந்திரன், துணை தலைவர் ரவிக்குமார், குன்னூர் நகர்மன்ற தலைவர் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவை பின்வரு மாறு:–
வரன்முறை
நீலகிரி மாவட்டத்தில் உள்ள விதி மீறிய அனுமதியற்ற அனைத்து கட்டிடங்களையும் தற்போது இருக்கும் சிறப்பு விதியை பயன்படுத்தி ஒரு முறை ஆக வரன்முறைப் படுத்துவதற்கான முயற்சி களை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்வது. இதற் கான அனைத்து கட்டிட உரிமையாளர்களும் தங்களது வரைபட சான்றுகளுடன் அரசிடம் அனுமதி கோரி விண்ணப்பம் அளிக்க வேண்டும் என வழிக்காட்டுதல் அளிப்பது.
அதே போல தற்போது நடைமுறையில் இருக்கும் மாஸ்டர் பிளான் இந்த 2010ம் ஆண்டுடன் முடிவுக்கு வந்து விடும். 2011 முதல்புதிய மாஸ்டர் பிளான் நடைமுறைக்கு வர உள்ளதால், அதை மாவட்டத்தின் தன்மைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்தியாவில் உள்ள மற்ற மலை வாசஸ் தலங்களான டார்ஜிலிங், சிம்லா போன்ற இடங்களுக்கு அரசு சார்பில் ஒரு குழு சென்று ஆராய வேண்டும். அதே போல் நீலகிரி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது என ஆலோசனை செய்யப் பட்டது.
ஒத்துழைக்க வேண்டும்
இந்த ஒரு முறை மட்டுமே அரசு சிறப்பு அனுமதி அளித்து கட்டிடங்களை வரன்முறை படுத்தப்படும். ஆனால் இதை ஒரு தொடர் நடவடிக்கையாக கருதி விடக்கூடாது. நீலகிரி மாவட்டத்தில் வணிக மய மாதலை ஒரு கட்டுப் பாட் டுக்குள் கொண்டு வரவும், மாவட்டத்தின் பசுமை தன்மை மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்க அனைத்து தரப்பு மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.
இந்த கூட்ட முடிவுகள் மாவட்ட மக்களிடம் எடுத்து சொல்வதற்கும், பாதிக்கப் பட்டவர்கள் கையாள வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்குவதற்குமான முறையில் இந்த கூட்டம் நடத்தப்பட்டது.
கூட்டத்தில் பா.ம.க. மாநில துணை பொது செயலாளர் பட்பயர் பத்மநாபன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் பத்ரி, பா.ஜனதா மாவட்ட

தலைவர் குமார், ம.தி.மு.க. மாநில செயற்குழு உறுப்பினர் ஆரிப்சேட், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் பெள்ளி, தே.மு.தி.க. கவுன்சிலர் விஸ்வநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.